# உதயதாரகை—MORNING STAR.

*Published on the 2d and 4th Thursday of every Month at two shillings a year, payable in advance.*

எட். புத்தகம் சஞ்சிகை மகூ] ௲அ௱சஎ ௵ ஐப்பசி மீ ௰௪ தேதி வியாழக்கிழமை Thursday, Oct. 14, 1847. [Vol. VII. No. 19.



## TERMS OF THE PAPER.

The *Terms of the Paper*, will be *half* the former charge or —*two shillings a year.*

☞ *Prepayment will be required in every case.*

*To Subscribers who receive the Paper by mail*, the terms will include the *postage*, which we are obliged to prepay at the rate of *one penny* each number. To them therefore, the price of the Paper will be—*four shillings a year.*

The difficulty of remitting small sums from distant places may be obviated by *five subscribers' uniting their subscriptions and remitting them together in a single pound note.*

The names of Subscribers will be published; and *all receipts of money* will be regularly acknowledged on the last page of the Paper.

*Subscribers on the Continent* may receive the paper at *four shillings a year*; their papers having to be sent by mail, and a postage of *one penny*, being *prepaid* on each. This is exclusive of Continental postage.

Agents are requested to receive no subscriptions except in conformity with the above terms.

Advertisements will be inserted as heretofore at the rate of *one penny and a half* each line, reckoning the type at Brevier size or seven and a half lines to an inch.

*All Notices of Deaths and Marriages will be chargeable as Advertisements.*

Communications should be *post-paid* to receive attention.

CHUNDICOOLY—Mr. W. Santiagopilly.
POINT PEDRO—Mr. G. H. Hallock.
JAFFNA—The Missionaries.
TRINCOMALIE—Rev. J. Walton.
KANDY—Mr. L. Lawton.
BATTICALOE—Rev. J. Gillings.
MADURA—Rev. C. F. Muzzy.
DINDIGUL—Rev. J. Rendall.
TRANQUEBAR—Mr. G. W. Coe.
MADRAS—P. R. Hunt, Esq.


## நாற்சமயகோளரி.

### நான்காங் காண்டம்.

### அகஸதியன்.

கம்பத்தெழுத்தோ கடையெழுத்தோ காலமெல்
லாங் கடந்தெழுத்தோ — உம்பர்க்குரியவுணர்வெழுத்
தோ ஒருக்காலிருக்காலுயிர்ப்பித்தெழுத்தோ — செம்
பொற்கிரியைச் சேர்ந்தெழுத்தோ சேர்ந்தாற்கென்
றுமருள்புரியும்—அன்பத்தோரட்சரமோ நம்மையக
ரமுதலவ்வெழுத்தென்றூர். (புலத்தியன்.)

ஓங்காரத்தின்பேரொளியோ உணர்வாய்நின்ற பரா
பரமே- பாங்காய்ப்பகரிலன்பத்தோரட்சரத்தையோ
—ஆங்காரத்தையோ மூலத்தையோ—நம்மையகரமு
தலவ்வெழுத்தென்றூர். (சனக்கன்.)

வேதாந்தத்தையோ அந்தத்தையோ வேரேயங்கி
ஷத்தின் பேரொளியோ—ஓதாய் நின்ற உகாரத்தை
யோ உணர்வாய் நின்ற யோகத்தையோ தீதாய் நி
ன்ற சிகாரத்தையோ செப்பில்விந்து நாதத்தையோ
—ஆதாரத்தையோ அகிலத்தையோ நம்மை அகரமு
தலவ்வெழுத்தென்றூர். (சனக்குமாரன்.)

தேடும்பொருளன்றித் தேடரிய செவ்வே நிற்குஞ்
சதாசிவத்தைக்—கூடுங்குடியுமுடியானைக் கூடாய்நி
ன்ற குருபரனை—வீடுங்குடியுமுடையானை வேறே நி
ற்கு மெய்ப்பொருளை—ஆடுங்குடியுமுடியானையோ ந
ம்மையகரமுதலவ்வெழுத்தென்றூர்.

இப்படிப்பட்ட பிராமண இரிஷிகளான நான்கு பே
ருந் தொகுத்தறியக் கூடாமல் வள்ளுவர் கிட்ட வந்து
தேவரீர் திருவுளம்பற்றின வாக்கியத்துக்கர்த்தம் எ
ங்களுக்குத் தெரியப்படச் சொல்லவேண்டுமென்று
கேட்டதற்கு வள்ளுவர் பரிகாசமாய்ச் சொன்ன க
வியென்னவென்றூல்,

தொண்ணூற்றெட்டாயுதத்தைக் குதிரைமேலேற்
றித் தூக்கிவைத்தவாறுதொக்குந் தொகுத்த நூல்கள்
—பண்ணூற்றெட்டாகமத்தைப் பயிற்றினலும் பரக
திக்கங்காளாகப் பாவித்தாலுங்—கண்ணூற்றெட்டா
ண்டித்துக் காட்டினலுங் கடலையடைய பளிங்குக்
காண்பித்தாலும்—வெண்ணூற்றூண்டடியோடே வி
ரித்தானென்றும் வெளியில்லாற்கிருளொழியமேலுமு
ண்டோ.

என்று கேட்டு இந்தப் பிரத்தியுத்தாரத்தை வள்
ளுவர் சொன்னதற்கு இந்நாலுபெயரும் அம் மெய்ப்
பொருளாகிய பராபரத்தினுடைய நிலையை எங்களு
க்குத் தயவு செய்து வெளிப்படுத்தவேண்டுமென்று
சாஷ்டாங்கமாய் விழுந்து கேட்டதற்குத் திரு வள்ளு
வர் சொன்ன கவியாவது,

ஒப்பில்லாக் கனகந்தன்னை உரைகல்லிலறியலா
துந்—தப்பில்லா மணிகளெல்லாஞ்சாணையிலறியலா
துங் — கற்புவாளெடுத்தான்றன்னைக் களரியிற் கா
ணலாதுஞ்—செப்பினலறியலாதுந்தேசிகன் பெருமை
தானே.—என்று வள்ளுவர் சொன்னதுந் தவிர,

ஒன்றாகக்காண்பதேகாட்சி ஒரைந்தும் வென்று
ன்றன்வீரமேவீரம்—ஒன்றிற் பிறந்ததொருகோடி சங்
கமும்— மன்றிற் பிறந்தார்க்கு வான்பொருளொன்று
ண்டு

என்று சொல்லப்பட்டஒரு காரணப்பொருளை நீக்
கிவைத்துப் பறை சாற்றத்தொடங்கின நியாயமேது
வென்று கேட்க, அந்நான்கு கர்த்தாக்களாலும் மறு
வுத்தரவு சொல்லத் தெரியாமல் மயங்கிக்கொண்டி
ருக்கிற தறுவாயிலே மாணிக்கவாசகர்சொன்னூர். இ
தன்றியே ஒரு செல்லாப் பணத்தைக்கொண்டு தொ
ள்ளாயிரத்துத்தொண்ணூற்றேன்பது குருக்களிடத்தி
ற் தீட்சை வாங்கினலும் அவனிடத்தில் உபதேசம்
பெற்றூலும் அவனுக்கு வஸ்து நிலையின்னதென்று
சொல்லத்திராணியில்லாமல்மோசம்போகிறூர்களெ
ன்றும்—பிறகு அவர் அறுசமயத்தைப் பார்த்து இக
ழ்ச்சியாய்ச் சொன்ன கவியாவது.

குத்தியெளவீட்டுகுதிக்குமொன்றுக் சோவதையை
க்கொண்டுவைத்து— கூத்தாடுமொன்று பித்தளைச்
செம்பைப்பண்ணிப் பிதத்துமொன்று பீலித்தவருட
னே பிணங்குமொன்று—சத்தமுடன் தலைசிரைத்து
த் தயங்குமொன்று தன்சடையைத்தானறுத்துத்தவி
க்குமொன்று—அத்தனருளறியாத சமையமாறு மறு
கோஷணையாயழிந்துபோமே. (பிரவஞ்சசக்கரம்.)

பாடத்தாலென்ன பலன் பாவினையாலென்ன ப
லன்— வேடத்தாலென்னபலன் மெய்ப்பொருளில்
லாதவர்க்கு—மூடத்தாற்கண்மிழியாமுழக்குருட்டைத்
தேவனென்று—ஓடக்கோலில்லாமலுருக்கவலைப்ப
ட்டேனே.

என்றிப்படியே அநேக ஞானிகளுள் தம் புராண
காவியங்களிலுந் தொண்ணூற்றூறு தத்துவத்திலேயு
ஞ் சொல்லிய பஞ்சாட்சரத்தையுமாருதாரத்தையுந்
தத்துவ நிலையையும் பார்த்து இதிலே யாதொரு வஸ்
துநிலையில்லையென்றும், அப்பராபரத்தினுடையஇல
ட்சணத்தையும் அவருடைய சுபாபமாகிய தத்துவத்
தையும் பகுத்தறியமாட்டாமல் ஒரு தெய்வமுண்டெ
ன்று சொன்னூர்களேயன்றி அதை அறியக்கூடாமல்
மோசம்போகிறூர்கள். ஆனல் இப்படிச் சொல்லப்
பட்ட வஸ்துவின் இயல்பைப் புத்திக்கூர்மையின் க
ண்ணினலேகிரகித்துப்பார்த்துவிசாரித்தாற்படைப்பு
ண்டபொருள்களுக்கெல்லாங்காரணப்பொருளாயிரு
ந்து படைத்த பொருள் ஒருவருண்டென்று வெட்ட
வெளிச்சமாய் அறிந்திருந்தும் அவரை உண்மையா
ய் ஏற்றுக்கொள்ளாமற் கெடுகிறூர்களென்று தீருகிற
துமன்றி, இனி இந்து நாலு வேதங்களைப் பற்றிப்பின்
னற் சொல்லலாமென்றிருக்க, அம் மெய்யங்கடவு
ளை விட்டுச் சிவன் விஷ்டுணுவையுந் தெய்வமாகப்
பாவித்து வருகிற இரண்டு மனித இராசாக்களை இப்
பொழுது பணிந்தால் அது முன் சொன்ன இலட்ச
ணங்களையுடைய ஒன்றான பராபர வஸ்துவைத்
தொழுகிறதாய்ப் பலன்தருமோவென்பீர்களானல் அ
ப்படிப்பட்ட தமிழர்களுக்கு இந்தக் காரியங்களை உ
ற்று விசாரிக்கிற விசேஷித்த அறிவுவேண்டாதாவெ
ன்றிருக்க நாங்கள் வேதத்திற்கு அயோக்கியரென்றும்,

### ௬ம். பிரிவு.

சிவனுஞ் சத்தியும் ஆதிமனிதச்சிருட்டிப்போடொ
த்த ஒரு மனிதனும் மனுஷியுமாயிருக்கிறூர்களெ
ன்பதைக் குறித்துச் சொல்லியது.

இனிச் சிவன் மெய்யங்கடவுளுக்குச் சரிசமமான
வராயிராமல் அக்கடவுளால்இப்பூவலயத்திற் சிருட்
டிக்கப்பட்டிருக்கிற மனிதர்களைப்போலொத்ததுற்கு
ணமுள்ள மனிதனுகிய சிவன் இராசாவாகவுங் கா
வற்காரனுகவுமிருந்து ஆண்டானென்றும், அத்திரிமூ
ர்த்திகளைச் சத்தியானவள் படைத்தாளென்றும், பி
ன்பு இம் மூவரும் அச்சத்தியைப் படைத்தார்களெ
ன்றும் அவர்களைச் சார்ந்த இந்து சமயத்தாருடைய
தவறுதலைப் பற்றியும், மேற் சொன்ன சிவனுஞ்சத்
தியும் வெறு மனிதர்களாயிருக்கிறூர்களென்பதைக்
குறித்துப் பின்னல் சொல்லிக் காட்டுவோமென்று
சொன்னேமே—அவர்களை இப்போ விபரித்துக் கா
ண்பிக்கிறதைக் கவனித்துக் கேட்பீர்களாக. அதெ
வ்வாறென்றூல்,

ஔவையார்—அன்னையும்பிதாவும்முன்னறி தெ
ய்வமென்று சொல்லியபடியே அவர்கள் நமக்குத்தா
யுந் தகப்பனுக முன் காணப்பட்ட தெய்வமாவார்க
ளென்றுரைத்திருக்க, அதில் முன்னேயென்று காண்
பிக்கிறதிற் பின்னென்று வசனிக்கக்கூடாதோ? அ
ப்படிக் கூடுகிறபடியினலே அம் மெய்யான தெய்வ
ம் ஒருவருண்டென்று பிரத்தியட்சமாய் விளங்குகிற
பொழுது அவரைத் தேடாமல் அவராலே சிருட்டித்த
சிட்டிப்பாகிய ஆதாம் ஏவாளென்கிற நம்முடைய
ஆதி தகப்பனுந் தாயுமாயிருக்கிறபேர்களை இந்து சம
யத்தார் அவ்விருவர்களுடைய பேரை மாற்றி வைத்
துக்கொண்டு சிவனென்றுஞ் சத்தியென்றுஞ் சொல்
லி அவர்களைத் தெய்வமாகத் தொழுது வணங்கிவரு
கிறவர்களுக்குண்டான எண்ணமாவதுயாதென்றூல்

இன்னும் வரும்.

---

பரோபகாரியான மையினர்த்துரைக்கு வந்தனம்.
எம். புத்தம், யசு. ஞ் சஞ்சிகையில் கண்காணி எ
ன்பவர் கேள்விக்கு விடை.

மண்டலபுருடன், நிகண்டு, யஉ. வதிற் சொல்லியப
டி நாட்டுக்கு எட்டுக்குற்றம்—அதாவது, விட்டில் த
ன்னரசு கப்பல்கள் வைக்கிறது, வெகு மழைபெய்கி
றது, பெருங் காற்றடிக்கிறது, கூத்து விளையாடுகிறது,
வேற்றரசு, கிளி பயிர்களைச் சேதம்பண்ணல்இந்தக்
குற்றத்திலே கூத்தும் குற்றம். ஆதலால் இதினலே
தனக்காவது நாட்டுக்காவது பலனுண்டென்று எவ
ன் சொல்லுவன். ஆனலும் நாட்டுக்கும் நகரத்துக்
கும் அதிபதியாயும் மனுநீதிசாஸ்திரமுறையுள்ளவனு
யுஞ் சக்கிரவத்தியாயுமிருக்கும் மகாராசனுக்கு மாத்தி
ரம் இந்த விதிவிலக்கு. மற்றவர்கள் இதுமுதலிய சில
காரியங்களை நடப்பிக்கத் தத்துவமில்லை ஆகை
யால் கூத்தினல் வரும் நட்டத்தை எழுத உதயதார
கையில் அடங்காது. சில காலத்துக்கு முன்னே சு
விசேஷ போதகர்கள் சிலரிடங் கொடுத்திருக்கு
ங் நடனநட்டமென்னும் புத்தகத்தை வாசித்தறிய
வும்.

இலங்கைத்தீவு வடமா காணம், பருத்தித்துறை } சத்தியவேதப்பிரியன் நீலன்கையெழுத்து.

உதாரணம், நன்னூற் சூத்திரம்.

தன்மகனுசான்மகனேமன்மகன்பொருணனிகொ
டுப்போன்வழிபடுவோனே உரைகோளாளற்குரைப்
பது நூலே.

புராணம்.

மன்னவன் மதலையாசான் மாமகன்றனது மை
ந்தன் பன்னுசொற்கொள்வோனீவோன் வழிபடுப
ண்பின்மிக்கோன்— இவர்களுக்கு நூல் சொல்லலா
மென்பதினலும் எழுதினது.

---

உதயதாரகையை நடாத்துந் துரையவர்களுக்கு,

ஐயா,

கனம்பொருந்திய சுப்பிறீங்கோட்டில் தீர்வைப்ப
டி தூக்கவிருந்த பாறுபதி கதிர்காமனென்னும் வரணி
யானுடைய மரணத்தைப் பார்க்கச் சென்றுபோன
செவ்வாய்க்கிழமை நானும் போனேன். அங்கே
அநேக சனங்கள் இருந்தார்கள் குறித்த கொலை
காரன் மரணத்துக்கு ஆயத்தப்பட்டவனுய்க் கைகளி
ரண்டும் பின்னும் முன்னும் கட்டப்பட்டவனுய்த் தூ
க்குமரத்தடிக்கு வந்தான் அவன் வரும்போது சந்
தோஷமாய்ப் பாதிரிமாரோடுபேசித் தன் சீவனைக்
கொடுக்கவெண்ணி வருகிறவன்போலல்லக், கல்யா
ணவீட்டுக்கு வருகிற மாப்பிள்ளையைப்போலமகிமை
யாய் வந்து தூக்குமரஞ் சேர்ந்தபோது அதியுத்தம ம
கத்துவந் தங்கிய தேசாதிபதியவர்களால் அவனைத்
தூக்கும்படி வந்த கட்டளை வாசிக்கப்பட்டது. உ
டனே அவன் சுறுக்காய்த் தூக்குமரத்திலேறி அதை
த் தூக்குமரமென்றெண்ணுது பிரசங்கக் கூடுபோலக்
கண்டு சிலபல பிரசங்கஞ் செய்தான். அவனையு
ம் அவனுக்குச் சம்பவிப்பதையுங் குறித்துச் சகலரு
ங் துக்கப்பட்டு நடுக்கத்தோடும் பெருமூச்சோடும் நி
ன்றதல்லாமற் சிலர் அறிவுகெட்டு விழுந்தார்கள். இ
வனே சந்தோஷமாய்ப் பிசுக்காலைநோக்கித் தனக்
குச் சம்பவித்ததை வடதேசத்துக் கலக்கட்டர்களி
ல் இருவருக்கு அறிவிக்கச் சொல்லிப் பாதிரிமாரையு
ம் தன் ஆத்துமத்துக்காய் வேண்டுதல்பண்ணக் கே
ட்டு, வந்து நிற்பவர்களுக்குக் கோபத்தாலும் பொரு
ளாசையாலும் வருங் கேட்டைப் பற்றித் தூக்கு மர
த்தில் நின்று பிரசங்கித்தான். அவன் அதற்கு முன்
செய்த அநேக பாவங்களை அறிக்கையிட்டான். த
ன்னைப்போலொருவருங் கேட்டுக்குட்படாதபடி புத்
தி சொன்னுன். அவன் திடாரிக்கமாய்ச் சொன்னு
லும் நாங்கள் அவன் சொன்ன முழக்காரியங்களை
யும் மட்டுக்கட்டக்கூடாதபடி பயங்கரத்தால் நிறை

ந்தோம். கடைசியாய் அவன் கழுத்தில் கொலைகாரன் கயிற்றைப் போட்டுத் தலையையும் முகத்தையும் மூடினன். அவன் தனக்குத் தலை மூடவேண்டாமென்று சொல்லி, ஆண்டவரே! கிறிஸ்துவே என் ஆவியை ஒப்புக்கொள்ளுமென்று சொல்லிச் சீவனைவிட்டான். இதைவிட ஆச்சரியம் நாம் கண்டதில்லை. மரணத்தறுவாயில் இவ்வளவு துணிவு ஒருவருக்கும் வராது. இவன் சென்றுபோன ஞாயிற்க்கிழமைகிறிஸ்தியானென்ற நாமத்தோடு கிறிஸ்துமார்க்கக்குருவால்ஞானஸ்நானம்பெற்முன். இவன்தப்பவெண்ணி அப்படிச் செய்தானென்றும் சிலர் அவன் தான்செய்தபாவத்திலிருந்து இம்மையிலல்ல மறுமையிற் தப்பும்படி அப்படிச் செய்தானென்றும் பேசுகிறார்கள். இவைகளிற் பிந்தினது சரியென்று நான் நினைக்கிறேன். இப்படிக்கு

பிறர் துயர்க் சிரங்கி.

# உ த ய தா ர கை.

யாழ்ப்பாணம், ௲அ௱௪௰௭ம் ஷு. அற்பசி மீ ௰௪ உ.

## நேர்மை நன்னெறி.

"நேர்மை நன்னெறி" என்பதைக் காட்டுகிறதற்குப் பின்னால் வருஞ் சரித்திரஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. எப்படியெனில், ஒருநாள் ஒரு வாலிபன் தனது சகோதரியும் அவள் பிள்ளைகளுந் துன்பமாயிருக்கக் கண்டு அவர்களுக்குதவிசெய்யச் சொல்லும்படி தனது மாமனார் வீட்டுக்குப்போகிற வழியில், அன்பதிறைசாற் போட்டிருந்த ஒருபணப் பையைக் கண்டெடுத்தான். அவன் கேள்விப்படி அவன் மாமனார் அவர்களுக்கியாதாமொரு உதவிசெய்யக் கூடாதென்று தட்டிப்போட்டதினால் அந்தச் சமுசாரம் வறிமையினீட்டம் மெத்த உபத்திரவப்படவேதுவாயிற்று அந்த வாலிபன் தான் கண்டெடுத்த பணப்பையைப் பற்றித் தன் மாதாவுக்குச் சொன்னாலும் அதிலுள்ள பணத்திற் சிலவற்றை எடுத்துச்செலவு பண்ணுகிறதைப் பற்றி மெத்தச் சந்தேகங்கொண்டதினால், அந்தப் பணம் அதாருடையதென்றறியும்படி புதினப் பத்திரிகையிற் பிரசுரஞ் செய்தார்கள். அப்பொழுது அப் பணப் பையைப் போட்டவனும் சடுதியில்வந்துதென்பட்டான். அவன் மிகவும்பெரிய பணக்காரனாயிருந்ததினால், அந்தப் பணப்பையைப் போட்டிருந்தெடுத்தபொடியனுடைய சமுசாரத்தின்வறிமையைப்பற்றிக் கேள்விப்பட்டுஅந்தப் பணம் முற்றையும் அவனுடைய துன்பக்காரச் சகோதரிக்குபகாரமாகக் கொடுத்துப் பொடியனையுந் தனக்கு வேலைகாரனாகச்சேர்த்துக்கொண்டுபோய்விட்டார். அந்தப்பொடியனிப்பொழுது அமேரிக்காவிலே பணவரத்துள்ள பெரிய வத்தகனாயிருக்கிறான்.

## குணப்பட்ட கிறீன்லாந்து தேசத்தான்.

நாத்தானுவேலென்பவன் அஞ்ஞானியாயிருந்து குணப்பட்ட பிற்பாடு, தன் ஊரவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவித்த வரலாறு:—"சகோதரருஞ் சகோதரிகளுமானவர்களே,எனக்குச் செவிகொடுங்கள்—நான் அஞ்ஞானியாய்ப் பாவவிருளிற்கிடந்தேன். வானம் பூமி இரண்டையுஞ் சிருட்டித்தவர் எங்கள் சாயலாகவானத்திலிருந்துபூமிக்குவந்து,தமதுதிரத்தைச் சிந்தி, எங்கள் பாவத்திற்காகச் சிலுவையிலறையப்பட்டுக் கை கால் விலாவிலீட்டியினாற் குற்றுண்டு இறந்துபோனார் அவரெங்களிருதயத்தின் பாவப்பிணியை மாற்றி நீதியென்னும் அங்கியை எங்களுக் குடுத்திவிக்கிறார். என்னருமையானவர்களே, இதைக் கவனித்து, ஒவ்வொருநாளும் அவரண்டைசென்றுவாருங்கள் அப்பொழுது நீங்கள் அவர்கண்ணுக்கு முன்பாக நியாயத்தீர்ப்பு நாளில் நிற்கும்பொழுது மனங் கலங்கி நிலைகொலையமாட்டீர்கள்."

## காலையில் வெள்ளென எழும்பு.

மனுஷனுடைய உடம்பிற்கும் மனசிற்கும் பெலத்தையும் பிரியத்தையுந் தருங் குளிர்மையுந் தெளிவுங் காலையிலுண்டு. காமிகளும் வீணருஞ் சோம்பருமதனால் வருமின்பத்தை அறியார்கள். நெடுநாளைக்குச் சுகமாய் வாழவிரும்புகிறவர்கள் வாடிக்கையாய்க் காலையில் வெள்ளென எழும்பவேண்டியது.

## நடனவினோதம.

இவ்விடத்தில் வெகுபேர் பலவகையானநாட்டியங் கிழமைக்கொருமுறையிருமுறைபழகிறார்களென்றும், வெகுபேர் பழகிச் சோடினைபோட்டுக் களரி பிடித்தார்களென்றுந் தெரியவருகின்றது. ஒருவன் ஐம்பதிறைசாற் செலவுபண்ணி இரவிலேகூத்தாடிப்பொழுதுவிடிய அவனெடுக்கிற நயமென்ன! நயமென்னவெனில், கூத்துப் பழக்குகிற பணிக்கனுக்குச் சாப்பாடு சம்பளம், கூத்தாட விளக்கெண்ணெய், சோடினைச் செலவு, தலைமைக்காரருக்குக் கைக்கூலி, கூத்திலடிபிடிப்பட்டு மண்டையுடைந்து மூளை சிதறல், இராமுற்றும் நித்திரைமுழித்த துன்பம், கூத்துப் பாத்துப்போகிறவர்களாலேச்சுக்கேட்டல், இவைகளே—வெகுபேர் எள்ளளவென்கிலும் மானவுனமற்றுமருங்கையிழந்து பிதாமாதா, கூடப் பிறந்த சகோதரர் சகோதரிகள் முதலானவர்கள் பார்க்க நின்று காதிற்கேராத சிற்றின்பமான பாட்டுக்களைப் படித்து, காமலீலைக்கடுத்தகுறிப்புகளை அவயவத்தினாற் காட்டி விளையாடுகிறார்கள். அவ்விதமாய் அநேகர் பரம சிந்தனையை விட்டு நாட்டியத்தில் மகிழ்ந்து சிற்றின்பத்தில் அழிழ்ந்திக்கூத்தாடி முன் சொன்ன பிரகாரம் நேரத்தையும் பணத்தையுஞ் சுகத்தையும் செலவிடும்பொழுது, அதைத் தங்கள் பிள்ளைகளுங் கண்டு நன் முயற்சிக்கான வேலையை விட்டுத்துன்மார்க்கத்தில் நிலைகொன்டு பொல்லாத காமிகளாகி வியாதிகொண்டு வறுமைப்பட்டு மெலிவடைகிறார்கள். மானிப்பாய்க் கோவிற்பற்றிற் சற்றே பணக்காரராயிருந்தவர்களிற் சிலர் கூத்தின் பொருட்டுத் தங்கள் பணத்தை இழந்து இம்மை மறுமை இரண்டிற்கும் நிற்பந்தராகிப்போனவர்களுண்டு. இந்த மாசம் ஒன்பதாந்தேதி சனிக்கிழமை இராத்திரி நவாலியென்னுங் குறிச்சியில் சோடினைபோட்டு விளையாடின கூத்தாடிகளைப் பற்றி நவாலியில் விதானை யாழ்ப்பாணத்துப் போலிஸ மஸதிருத்துக்கு இறப்போடுத்துப்பண்ணவேண்டியது அவருடையகடமையாயிருக்கின்றது.

## க ண் டி.

இற்றைக்குச் சிறிது நாளைக்குமுன் கண்டியிலொருவனைத் தூக்கிச் சாகக் கொல்லும்படி அவன் கழுத்திற் கயிற்றைப்போட்டிறுக்கி அவனின்ற ஏதண்டையைப்பொறித்துவிட்டபொழுதுகயிறறுந்துவிழுந்துவிட்டான். திரும்பவும் அவனை உயரவெடுத்துத்தூக்கினபோது திரும்பவுங் கயிறறுந்து கீழேவிழுந்தான். இரண்டாம் முறை விழுந்த போது அவனுக்குயிர்போகாதிருந்துங் கண்ணிரண்டும் பிதுங்கி வெளிக்கிடவேதுவாயிருந்தது. அந்நேரம் அவ்விடம் நின்ற துரைமாரிற் சிலர் இது காரியத்தைக் கண்டு மனங் கூசி, மகராசாவிடம் போய் அறிவித்தபொழுது, அவரவனைத் தூக்காமல் விட்டு மறியல்வீட்டிற் கொண்டுபோய்ச்சீமையிலிருந்துகட்டளைவருமட்டும் அவனை அச்சறுக்கையுடன் வைத்திருக்கும்படி கட்டளைபண்ணினார்.

## கொழுமபு.

கப்பல் முதலிய உருக்களுக்குத் துறை முகங்காட்டும்படி வைக்கப்பட்ட தீநாத்தானமென்ற வீட்டுக்கு நேரேகரையோரத்தில்,பிரமாண்டமான ஓர் திமிங்கிலமீன் செத்துமிதந்ததைப் பார்க்கும்படி கொழும்பிலுள்ள வெகுபேர் கூட்டங்கூட்டமாய்ப் போகிறார்களென்றுபுதினப்பத்திரிகையினாற்றெரியவந்தது.

## திருக்கோணதமலை.

அவமரணம்.—பிறகீட்ட ஆவணிமாதத்திலொருநாள் திருக்கோணதமலையிலிருக்கும் அப்துல் கன்னியென்னுமோர் துலுக்கனுடைய ஏழுவயதுள்ள ஒரு பையனை அவன் படிக்கும் மிசியோன் பள்ளிக்கூடத்திற் போய் ஒரு சோனகன் குருவி பிடித்துத் தருகிறேனென்று அணைப்பிக்கொண்டுபோய் விசுவநாத சுவாமி கோவிலுக்குப் பின்பக்கமாயிருக்கிற காட்டில் மிகவும் பயங்கரப்படத்தக்கவிதமாய்ப் பையனுடைய சீலையால் அவனைச் சேர்த்துக் காலோடு கழுத்தைத் தொடுத்துக் கட்டி எழுத்தாணியாற் கண்ணுக்குள்ளே குத்திச் சீவனை வதைத்துப் பையன் அணிந்திருந்த காப்புக்காறை முதலிய ஆபரணங்களைக் களற்றிக்கொண்டுபோய்விட்டான். இந்தச் சண்டாளத்துரோகியைப் பிடித்து மேல்விளக்கத்துக்காய்அரசாட்சியார் சிறைச்சாலையில் வைத்திருக்கிறார்களென்று கேள்வியுற்றோம். பொருளாசை சகல பொல்லாப்புக்கும் வேராயிருக்கின்றது.

## வ ம பா ய்.

வம்பாய் நகரியிற் பார்சியென்னும் வருணத்தவர்களுக்குப் பதினேழ வருடக்காலமாய்க்குருக்களாயிருந்த ஒருவர் எழுபத்தொரு பராயத்திற் காலஞ்சென்றுவிட்டார். மேற்கிந்தியாதேசத்திலுள்ள பார்சியர் சகலருமதிசயங்கொள்ளத்தக்க அவ்வளவு இவர்நானாவித கல்வியிலும் மகா நிபுணத்துவமுள்ளவராயிருந்தார்.

## அல்லாபாத்து.

ஆற்றுப் பிரளயப்பெருக்கம்—அா௲அம் ஆண்டிற் பிறகு, அல்லாபாத்து நகரியிலாற்றுப் பெருக்கமில்லாதிருந்தும் இப்பொழுது அவ்விடத்தில் நாற்பத்தொரடிக்கு ஆறுபெருகிக் கொந்தளித்து அணையையுங்கடக்கவேதுவாயிருப்பதால்வெள்ளமெடுக்குமென்று ஊர்முற்றும் பயந்து திகில்கொண்டவர்களாயிருக்கிறார்கள். இந்த அபாயஞ் சம்பவிக்கிறவேளையில், அதைச் சனங்களுக்கறிவித்து மூன்றுதரம் வெடிதீரும்படி ஆற்றின்கரையோரமாய்ப் பெரிய துவக்கொன்று நட்டு வெகு பெயர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நீர்ப்பெருக்குத் தணியாமல் வரவர அதிகப்படுகில், துவக்கையும் இருந்து வெடிசுட்டவர்களையுங்கொண்டப்புறப்படும்படி மாட்டுவண்டிலொன்று தினந்தோறும் ஆற்றின் கரையிற் தயாராயிருக்குது.

## லா கோ ர்.

லாகோரென்ற பட்டினம் முற்றிலும் இதற்கு முன் வலுவந்தமாய் ஆட்களைப்பிடித்து ஊழியஞ் செய்விக்கிற வாடிக்கையிருந்தது. அந்த வாடிக்கையை அழிக்கும்பொருட்டிப்பொழுது கோவரணமேந்தார் ஒரு பிரசித்தம்பண்ணியிருக்கிறார்கள். அந்த வாடிக்கையானது கிழக்குத்தேசத்திற் பண்டுதொட்டுப்பரவணியாய் நடந்துவந்தும் அதை அழிக்கக் கோவரணமேந்தார் கூடியளவு தெண்டித்துப் பார்த்துங் கூடாமற்போயிற்று. இப்பொழுதோவென்றால் அவ்விடத்திற் தானுபதியாயிருக்கின்ற இங்கிலீசுத் துரைமகனுடையசாமாத்தியத்தினாலேஇந்த வாடிக்கைஅழிந்துபோகவேதுவாயிற்று. இந்த விளம்பரம்பண்ணி அதுபெலன்கொண்டு வழங்கினதின் பிறகு, மெத்த அகத்தியமான காரியத்திலன்றி மற்றும்படி ஆராகுதல் மனிதரையாகுதல், மாடுகளையாகுதல், அல்லது மாட்டுவண்டில்களையாகுதல் வலுவந்தமாய்ப் பிடித்து வேலை செய்விக்கில் அவர்கள் கடூரமான ஆக்கினைப்படுவார்களென்று நிருபிக்கப்பட்டது.

## Lord Torrington's visit to Kandy.

எண்டிசை புகழ் கண்டி நகர்க்குள்ளே—லாட்டுரேறிங்ர ராசனேகுஞ் சிறப்பைப் பாரும் பாருமே.
அண்டுபீரங்கிபதினேழ்வேட்டுமடுத்தடுத்தடுத்தடுத்துத்தீரத்
தொண்டுசெய்யுங்கெதித்துருப்புத் துரகந் தொங்காத்தொங்காத் தொங்காவென்றேபாய—எண்டிசை.

௨. காலைப்பொழுதில்வாலைப்பருதிபோல் அதிருபவதனகருணைநிறைந்த கிரணஞ்சொரியவே
வேலைத்திரைசூழ் ஞாலத்திலங்கையை அரசாளும் ராணி
வித்தோரியாவின் முத்திரை துலங்கவே
கோலச்சிங்களவர் தமிழர் சோனகர் கும்பிட்டுத்தென்பட்டுப் பின்பட்டிறைஞ்சவிக்
காலத்திங்கிரிசுத்துரைமார் தொப்பி கழற்றிச் சிரத்தைக் குனித்துச் சலாஞ்செய்ய—எண்டிசை.

௩. கத்திகட்டிக் கற்னலீட்டமோ அவர்பின்னே செல்லுங்
கப்பித்தான்மார்மொய்த்தகூட்டமோ
தித்திக்கும்பான் வாத்தியநாட்டமோ திடுதிடெனமுழக்கஞ்
செய்யுந்தம்பூரேலியின் முட்டமோ
தத்துவயேட்டிக்கொங் துரைமார்சூழ் தரச்சங்கைக்கொலோனியற்சக்கிடுத்தார்வர
எத்திக்கும் போற்றியவைக்கவுன்பட்டத்தினெங்கள திபனிரட்டைச்சாரட்டின் மேல்—எண்டி.

௪. பாலக்குத்தகைஞாலனீக்கவும் பரிதானம்வாங்கும் பணிவிடைத்துரைமாரைப்போக்கவும்
சீலக்கறுவாத்தீர்வை மாற்றவுஞ் சீரானபுத்தர்
தேவாலயத்தின்மானியமேற்றவும்
மாலத்திரள் பிட்டிசங் கொடுத்துத் தயை வையும் வையுமருள் செய்யுஞ் செய்புமென
பாலித்த கூலிச்சனங்கையெடுத்தெம்மூர் பஞ்சம் பஞ்சமுன்றன்றஞ்சந்தஞ்சமென—எண்டிசை.
வீதிதோறும் பொலிசை நிறுத்தினார் தெருக்கோணம்
போன்வீட்டைக்கடையையுடைத்துப்பொருத்தினார்
கோதுபோன குளத்தைத் திருத்தினார் அதிற் குடிசனங்கள்
குளிக்காவண்ணனந்தமுக்காலுறுத்தினார்
போதிய ஏசன்று வுல்லர் துரைக்கும் போலீசுலோக்கோபண்டாத்துரைக்குர்
நீதவானுக்குஞ் சிவிலிஞ்சினீருக்குமிட்டதிட்டமுடன் கட்டளையுமிட்டார்—எண்டிசை.

௫. மானத்துடன் போல்தினி போடுவார் திருக்கோருணே காலில்
மதகரித்திரள்வேட்டையாடுவார்
கானற் பொழி கானகத்தை நாடுவார் புகைக்கரத்தைப் போக்க
காட்டுவழிமேல்றேட்டுத் தேடுவார்
பூனற்பயிரிடுஞ்சங்கத்துக்குனகர்ப் புத்தக சாலைக்கும் மெய்த்தலைவனாகித்
தானத்தருமச் சங்கங்களனைத்துக்குந் தந்தையுமாயினார்விந்தையதாகவே—எண்டிசை.

கண்டி, ௲அ௱௪௰௭ம் ஆண்டு
ஆவணி மாசம், ௨௰௩. தேதி.

# MORNING STAR.

## Jaffna, October 14th, 1847.

### PATRIARCHAL CONTEMPORARIES.

[From the American Biblical Repertory.]

Chronological Tables.

Table II.—*From the Flood to Abraham, Isaac, and Jacob.*

| | Adam. | Shem. | Arphaxad. | Salah. | Eber. | Peleg. | Reu. | Serug. | Nahor. | Terah. | Abram. | Isaac. | Jacob. | Born. (Anno Mundi) | Died. (Anno Mundi) | Age. (Anno Mundi) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Noah | 950 | | | | | | | | | | | | | 1056 | 2006 | 950 |
| Shem | 450 | 600 | | | | | | | | | | | | 1556 | 2156 | 600 |
| Arphaxad | 350 | 438 | 438 | | | | | | | | | | | 1658 | 2096 | 138 |
| Salah | 315 | 433 | 403 | 433 | | | | | | | | | | 1693 | 2126 | 433 |
| Eber | 285 | 433 | 373 | 403 | 464 | | | | | | | | | 1723 | 2187 | 464 |
| Peleg | 209 | 209 | 209 | 209 | 209 | 209 | | | | | | | | 1757 | 1916 | 209 |
| Reu | 221 | 239 | 239 | 239 | 239 | 170 | 239 | | | | | | | 1787 | 2026 | 239 |
| Serug | 189 | 230 | 230 | 230 | 230 | 165 | 207 | 230 | | | | | | 1819 | 2049 | 230 |
| Nahor | 158 | 148 | 148 | 148 | 148 | 67 | 148 | 148 | 148 | | | | | 1849 | 1997 | 148 |
| Terah | 130 | 205 | 177 | 205 | 205 | | 100 | 130 | 148 | 205 | | | | 1878 | 2124 | 205 |
| Abram | 60 | 175 | 148 | 175 | 175 | | 78 | 101 | 49 | 175 | 175 | | | 1948 | 2123 | 175 |
| Isaac | | 108 | 58 | 78 | 139 | | | 1 | 76 | 75 | 75 | 180 | | 2048 | 2228 | 180 |
| Jacob | | 48 | | 18 | 79 | | | | 16 | 15 | 15 | 120 | 147 | 2108 | 2255 | 147 |

The results of the second table are no less striking and instructive. Whoever imagined, without making the comparison, that Noah lived to see Abram sixty years old, and that Shem lived to witness all the glorious things transacted between God and Abram, and finally to see him buried and to unite in the general mourning for the father of the faithful! Who would have supposed that Abram lived his whole lifetime, Isaac for one hundred and eight years, and Jacob for forty-eight years, with those who for one hundred years of their early life witnessed and assisted in the building of the ark; who were borne triumphantly in it through the swelling flood, saw the opening heavens, felt the heaving earth when its deep foundations were broken up, and heard the groan of a perishing world! Yet such was the fact, as will be seen by comparing births and deaths in the second table. Noah was contemporary with every generation after him down to Abram; Shem down to Jacob; and Arphaxad down to Isaac; Salah and Eber again down to Jacob, and probably Eber to the twelve sons of Jacob.

Every one disposed to do so, can trace the same facts in regard to the manifold channels of communication from the flood to Abram, Isaac, and Jacob, as we found from the creation to the flood. We will only notice here the whole chain from Adam to the fathers of the Hebrews. Three narrations only were necessary to bring the account of creation to those fathers; and a part of the cords entwined in this "cable strong," may be seen from the following collation:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Adam | could narrate to | Enos,<br>Cainaan,<br>Mahalaleel,<br>Jared,<br>Methuselah,<br>Lamech, | could narrate to | Noah,<br>Shem,<br>Ham, and<br>Joseph. | could narrate to | Shem, etc.,<br>Arphaxad,etc<br>Nahor,<br>Abraham,<br>Isaac,<br>Jacob, |

Three narrations bring the account to the time when minute and particular history commences; and when the art of inscribing upon papyrus and probably upon parchment was understood. The participators in the awful scenes of the flood lived to see the Pharaohs, the pyramids and obelisks of Egypt, and probably to have those scenes stereotyped on monuments and in hieroglyphics which have come down to us. So that we have the account, in a manner, second-handed from Shem.

We here leave this interesting field of observation to be persued by the intelligent Christian at his leisure.

### THE PEN OF IRON.

When Bishop Latimer was on trial, he at first answered carelessly. But presently he heard the pen going behind the tapestry, which was taking down his words. Then he was careful what he said. There is an all recording pen behind the curtain of the skies, taking down our words and acts for judgment.

It is a pen of iron. "The sin of Judah is written with a pen of iron, and the point of a diamond." It graves deep its record on the imperishable tablets of eternity—a record of every thought, and word, and act. How ought we to live, since we can almost hear the all-recording pen going every hour, since we know that every day we are filling a page in the books that shall be opened at the judgment, and the record is imperishable as eternity.

A rich landlord in England once performed an act of tyrannical injustice to a widowed tenant. The widow's son who saw it, became a painter, and years after succeeded in placing a painting of that scene, where their oppressor saw it. As his eyes fell on the picture, the rich man turned pale and trembled, and offered any sum to purchase it, that he might put it out of sight. If every scene of wickedness through which a man passes should be painted, and the paintings hung up about him, so that he would always see the portrait of himself with the evil passions expressed on his countenance, and himself in every act of wickedness, he would be wretched. Such a picture gallery there is; and in eternity the sinner will dwell in it, for every feature and lineament of the soul in every feeling and act of wickedness, is portrayed imperishably, and will be exhibited to the gaze of the universe forever.

By the discoveries of modern science, the rays of the sun are made to form the exact portrait of him on whom they shine. We are all living in the sunlight of eternity, which is transferring to plates more enduring than brass the exact portrait of the soul in every successive act, with all its attendant circumstances.

Interesting to the antiquarian is the moment when he drags out from the sands of Egypt some obelisk on which the "pen of iron, and the point of a diamond," have graven the portraits, the attitudes, the dresses, and the pursuits of men who lived and died 3,000 years ago. But who can express the interest of that moment when, from the silence of eternity, shall be brought out tablets thick set with the sculptured history of a sinful soul, and men and angels, with the sinner himself, shall gaze appalled on the faithful portraiture of a life of sin. Remember, then, O transgressor, you must meet the record of your sin in eternity.—*N. E. Puritan.*

### CAPITAL PUNISHMENT.

We place the whole stress of the argument for death as the punishment of murder, upon the one comprehensive consideration, that such punishment cannot be dispensed with. Prove to us that the abolition of capital punishment in all cases, would not in time draw after it infinite evils; prove to us that law can be sustained without the sword in the hand of the powers that are to administer it; prove that the state can continue to be a state, after solemnly abrogating its own right to inflict, upon crimes that strike directly at the existence of society, that extreme penalty which is the ultimate sanction of all law, and without which, as a coercive motive to submission, no other penalty is adequate to express with full distinctness and power the abhorrence with which the state ought to regard a crime so horrible as murder; prove that it is safe to let the murderer live, safe for the innocent, safe for all the interests which it is the duty of civil government to guard; and when the proof on these points is clearly made out, we will give our influence to secure the abolition of all punishment by death. But till such proof is produced, we cannot but regard the proposed abolition of this ultimate and highest sanction of law, as involving in the end the abolition of all punishment, and the complete disorganization of society.

In the precept given by Noah, construe it as you will, we see the announcement of a great principle, which, so long as human nature exists in the world, will probably make the punishment of death for murder, indispensable to the safety of society—not to say, indispensable to the existence of any government. Translate it if you please, as the simple declaration of a fact, "Whosoever sheddeth man's blood, by man will his blood be shed." Tell us then which shall we have?–the law, the trial, the sentence, the execution, all in the solemn dignity of unimpassioned justice—or the wild vengeance of maddened and maddening instincts? Which shall we have?–the public prosecutor, the judge, the jury, the sheriff, and the scaffold—or the *goel*—the Arab or Indian blood-avenger—hunting down his victim, and slaying him wherever he can find him?

All the ages of the world, and all the nations of mankind have given their testimony, that the punishment of death for murder, as the highest crime against society, is necessary. Let it be proved that all ages and all nations have been mistaken. What other punishment is there which will sufficiently express the natural and legitimate horror of man against murder? What other punishment will satisfy, not the lower animal feeling of resentment and wrath—but the higher sense of justice demanding that every crime receive its fit reward, so the innocent may dwell in safety and in peace? What other punishment can give to the law that guards the sacredness of human life, a sanction so majestic? What other punishment will be equally efficient *in terrorem*, awing the child, the youth, the man, in every condition, with a fit sense of the dreadfulness of this most dreadful crime?—*Dr. Bacon.*

### Incongruity of the Manners and Religious Customs of the Hindus.

On this field meet every element of exciting interest. It is a field where a beautiful country is defaced with obscene idols, where gentle manners are deformed by rank depravity, and keen intellects are stultified by drivelling superstitions. The intelligence, polish and gentleness of the people make the darkness of their souls a thousand times more frightful. There is no savage congruity bewteen their superstitions and their manners. You are shocked by the alliance of education and darkness, polish and debasement. A man makes an elegant bow, pays a graceful compliment, discusses metaphysics, writes poetry, calculates an eclipse, and worships a snake! The abruption is horrible; the shock is far greater than to see a similar act done by a savage, who never wore a robe nor saw a letter. In the one case, Satan stalks as a marauder; in the other, he sits as a king, with literature, science and antiquity adorning his throne. This civilized, lettered, accomplished idolatry is the most startling thing on earth; man's worst curse; Satan's highest triumph. It should thrill and startle and rouse us. To see naked, tatooed savages, with fiendish yells, holding a cannibal feast on some wild island would be horrible, yet it would be uniform. But who could bear to see courtly ladies, in the aisles of a cathedral, and to the sound of Handle's music, eating human limbs?—*Mr. Walter.*

### The Converted Greenlander.

Once Nathanael was a pagan, ignorant and b lind, bu after he became a Christian, it was in this wise that he addressed his Greenland brothers; "Hear me all. Brothers and sisters, I have been a pagan, and as such I have lived for a long time in ignorance and in sin. But give me your attention. I will say only a few words. The Creator of heaven and earth has descended from heaven to us, and has taken our nature. He has shed his blood, and has died for our sins. And why? He has told us himself in his holy word. It was because the thoughts of the heart of man were bad. It was to purify us from all sin that he shed his precious blood. It was for us that he hung upon the cross, and was pierced in his feet, his hands, and his side; and if we always have him present before our eyes in this state, we shall hate sin. He cures our hearts of the malady of sin, and clothes us with a robe of righteousness, which he has purchased by his precious blood. Consider this, then, my dear friends; go to him every day of your life, and you shall not be confounded in his presence in the day of his appearing."—*Le Petit Messager des Missions.*

### AN HONEST BOY.

That "honesty is the best policy" was illustrated some years since under the following circumstances, detailed by the Rochester Democrat. A lad was proceeding to an uncle's, to petition him for aid for a sick sister and her children, when he found a wallet containing $50. The aid was refused, and the distressed family were pinched for want. The boy revealed the fortune to his mother, but expressed a doubt about using any portion of the money. His mother confirmed the good resolution—the pocket was advertised, and the owner found. Being a man of wealth, upon learning the history of the family, he presented the fifty dollars to his sick sister, and took the boy into his service, and he is now one of the most successful merchants in Ohio. Honesty always brings its reward—to the mind, if not to the pocket.

### KEEPING A SECRET.

Some people find it the hardest thing in the world to keep a secret. The troublesome thing worries them so much that they feel obliged to call three or four friends to help them keep it, until at last it is in the possession of so many that it is not considered worth keeping any longer, and the tremendous secret becomes common property. It has been related of Washington, that he once had in view an important expedition, the direction of which he thought it prudent to be kept private, but he was teased very hard by one of his officers to be told the particulars. At last Washington, becoming tired of his importunity, said to him in a confiding tone—"Can you keep a secret?" "Yes," said the officer. "So can I," was the reply of Washington.

### THEY DON'T HURT ME.

"Mother," said a little boy in our p resence the other day, "I've got such a bad headache and sore throat too." "Have you, my dear?" asked the mother, "well, you shall have some *Medicine.*" "It's no matter," retorted the shrewd urchin, "I've got em—*but they don't hurt me.*"

### WELL ANSWERED.

A person who suspected that a minister of his acquaintance was not truly orthodox, went to him, and said,—

"Sir, I am told that you are against the perseverance of saints."

"Not I, indeed," answered the minister, "it is the perseverance of sinners that I oppose."

"But that is not a satisfactory answer, sir. Do you think that a child of God can fall very low, and yet be restored?"

He replied, "I think it will be very dangerous for any one to try the experiment."

Marriage Ordinance.—The *Gazette* of Sept. 25, contains the long anticipated Draft Ordinance on the subject of Marriage and Registration.—This important Document has been under the consideration of Government for we know not how long, but for more than a *decade* of years, and it is naturally to be expected that it should now bear within itself the evidence of such long and anxious deliberation. A cursory perusal of the Document has produced on our minds a lively impression of the importance of the object aimed at, the difficulties to be surmounted and reconciled in its attainment, and the anxious solicitude of Government to devise such provisions as would secure to its subjects equally, their just rights and priviliges in relation thereto. And we confess our agreable surprise at the degree of success which has crowned the deliberations of Government on this all-important subject. The adoption of the Ordinance cannot fail, in our humble opinion, to have a most beneficial influence on the native community.—We earnestly hope its progress through the assembly and its final sanction by Her Majesty may meet with no impediment.

---

Native Dances.—We understand that there are several parties of native dancers, practising in this neighbourhood—and that some of them have masqued performances that continue through the night. We have nothing now to say against dancing in itself considered. Those who are persuaded they cannot find better employment for their time may as well dance, but *native night dancing* in masques, with its usual accompaniments, we believe to be a gross immorality that ought to be suppressed. Many parents and old men in this vicinity, know by unhappy experience, that the practice is attended with most pernicious results to the morals of their children, and not a few of the once respectable inhabitants of Manepy, have been b y this means led into courses of dissipation, which have resulted in the waste of their property, and the ruin of their happiness for this life and that which is to come. The Navarly *Vidahn*, if he would perform his *duty* ought to report these dancing *practices* and *practisers* to the Police Magistrate of Jaffna.

A Nuisance.

Dear Mr. Editor,—Lately riding through the town, I was struck with the excellent state of the roads and the cleanliness and beauty of the place, and could scarcely suppress my admiration, when after passing the bridge, near the burying ground, suddenly I brought up on a great heap of *refuse* material the outcastings, I suppose, of the numerous yards and kitchens in that neighbourhood. On inquiring whose duty it was to remove such obstructions, I did not ascertain, but it was said the Agent was now absent on duty at Colombo.—Perhaps the publication of this may serve as a flapper to whomsoever it may be, that should conserve the public benefit in a matter of this kind.

Yours truly, Observer.

---

Disgraceful.—The Colombo Papers give an account of a most barbarous attempt at public execution lately at Kandy. The wretched criminal was twice *dropped* and in both cases the rope broke, though in the latter instance he was so nearly strangled that his eyes started from their sockets. Some gentleman present disgusted at such proceedings, ran off to the Government *Pavilion* where His Excellency happened to be, and on stating the case procured a reprieve for the prisoner, who was remanded to jail, pending it is supposed a reference of the matter to Her Majesty.

---

A Whale.—The *Observer* mentions that the carcass of a whale had drifted on the shore, opposite the lighthouse, at Colombo, and that the inhabitants were flocking in crowds to see it.

---

School Commission.—The Rev. A. D. Gordon has been appointed by Government a member of the Central School Commission at Colombo.

---

Freshets in India—The rivers have not risen so high as they are at present at Allahabad since 1838. The total rise has been 41 feet! The greatest apprehensions are entertained lest the embankments should burst, in which case the whole country will be immediately inundated, and whole villages swept away. A great gun is planted near the bank to fire three signals as an alarm to the inhabitans in case of an out break, and a bullock and cart are in readiness to carry away the gun and the artillery men, in case of need.—*Fr. of India.*

---

American Presbyterian Mission.

From the *Hurkaru* of Saturday evening, we learn that the American Presbyterian Mission at Allahabad, at present consists of "the Rev. Messrs. Warren, Freeman, Owen, and Wray, with their wives, and that their labours during the past ten years have been uninterrupted by any serious illness. During two years, ten natives have been baptized. A Mission Church was also completed and opened at the commencement of the present year. Its dimensions, including the portico, are 96 feet by 45, and its cost has been Rupees 7,400." The Mission College at Allahabad, which was once a Government institution but was given up at the close of last September, now has an attendance of more than double the number of pupils there was when the College was in the hands of Government, and this, notwithstanding the introduction of the Bible as a class-book! A Press is also connected with the Mission and is chiefly employed in printing vernacular books for gratuitous circulation.—*ibid.*

---

Death of a Parsee Scholar.

The *Bombay Telegraph* has a long and interesting obituary notice of *Eduljee Dustoor*, who recently died at the age of 71, deepy regretted by his friends, relations, and connections. For seventeen years he held the post of high priest of the Parsee community at Bombay, and was greatly admired for his learning. He was the most eminent *Zend* and *Pehlevi* scholar of all the Parsees of Western India.—*ibid.*

---

Abolition of forced Labor.

From the *Bombay Times*, we learn that a proclamation has been issued for the suppression of forced labour throughout the Punjab. The same system prevails in that country which has prevailed from time immemorial throughout the East, and which all the care and attention of our Government have not been sufficient to eradicate. It is now by the advice and approval of the British Resident, sought to abolish this system, and the forcible appropriation of men, or carts, or cattle, except in cases of urgent necessity, is declared liable to severe punishment.—*ibid.*

---

## OVERLAND INTELLIGENCE.

The last Overland mail brought us intelligence from England down to Aug. 21.

The elections for the new Parliament are completed. No Parliament since the passing of the Reform Bill has contained so many new members, or so completely severed the old party alliances. The Parliament will be strong for free-trade and liberal measures. The elections in Ireland have shewn that the *Repeal of the Union* is increasingly popular and a measure strongly insisted on for remedying the evils of that unhappy county.—Her Majesty was making her anticipated visit in Scotland.—In France there is an increasing outcry against the corruption and venality of Ministers, and the king himself is made the subject of severe (though indirect) animadversion. A most horrid murder had been committed on the person of the Duchess de Praslin. The Duke her husband is under arrest on suspicion of having perpetrated the act.

The affairs of Spain still remain in a state of great confusion.—The North of Spain is suffering all the horrors of a civil war, and the most horrid babarity marks the proceedings of the conflicting parties.

In Italy the Pope with his new Secretary of State, is proceeding with vigour to quell the attempts at insurrection and to bring the conspirators to trial. A protest had been issued against the proceedings of Austria in Ferrara and apprehensions are entertained of an outbreak between the two countries. The National Guard is fast being organized. The representative Council was to meet in Rome at November. Twenty-three deputies have been appointed representing the provinces of the States of the Church. The majority of the representatives are eminent lawyers and all without exception are laymen. The sentiments of the Pope towards the Jesuits, were considered to be manifested by His Holiness having declined to observe the established usage of attending mass at the Church of Ignatius on the festival of that saint.—The Government has decreed the penalty of confinement in the galleys for from 10 to 20 years against whoever insulted an Israelite.

There was a prospect of peace between the United States and Mexico. Commissioners had been appointed by the Mexican Government to treat with Mr. Trist, the U. S. Commissioner on the subject. General Scott was remaining at Puebla.

---

A KIND WORD.

"If a civil word or two will render a man happy," said a French king, "he must be a wretch indeed, who will not give them to him. Such a disposition is like lighting another man's candle by one's own, which loses none of its brilliancy by what the other gains.

If all mankind possessed this feeling, how much happier the world would be than it now is.

---

The hypocrite and the Pharisee, like some beasts, are only valuable for their skin and their fine colours.

*Cudworth.*

---

I commend myself into thy hands, O Father, by whose providence I came into this world, by whose providence I have been kept in this world, and by whose providence I would depart hence and be with Christ.—*Bradford.*

---

ECONOMY OF HUMAN LIFE.

*Fortitude.*

Perils, and misfortunes, want, pain, and injury, are the lot of every man that cometh into the world.

It behoveth thee, therefore, early to fortify thy mind with courage and patience, that thou mayest support with resolution thy allotted portion of calamity.

As the camel beareth labour and heat, and hunger and thirst through deserts of sand, and fainteth not, so a man of fortitude shall sustain his virtue through perils and distress.

A noble spirit disdaineth the malice of fortune; his greatness of soul is not to be cast down.

His happiness dependeth not on her smiles; and therefore with her frowns he shall not be dismayed.

As a rock in the sea he standeth firm; and the dashing of the waves disturbeth him not.

He raises his head like a tower on a hill; and the arrows of misfortune drop at his feet.

In the instant of danger the courage of his heart sustaineth him; and the steadiness of his mind beareth him out

He meeteth the evils of life as a man that goeth forth unto battle, with assurance of victory.

Under the pressure of misfortunes his calmness alleviates their weight; and by his constancy he shall surmount them.

But the disturbed spirit of a timorous man betrayeth him unto shame.

By shrinking under poverty he stoopeth down to meanness; and by tamely bearing insults he inviteth injuries.

As a reed is shaken with the breath of the air, so the shadow of evil maketh him tremble.

In the hour of danger he is embarrassed and confounded; in the day of misfortune he sinketh, and despair overwhelmeth his soul.

---

## மனுவாழ்வின் ஒழுங்குப் பிரமாணம்.

திடம்.

ஆபத்தும், அதிட்டவீனமும், வறிமையும், துன்பமும், கேடும், இவ்வுலகில் ஒவ்வொருவனுக்குமிட்டபடியாம். ஆதலால் உனக்கிடப்பட்டிருக்கும் ஆபத்தின் பகுதியைத் திடமுடன் நீ சகித்துக்கொள்ளும்படி ஏலவே உன் மனதைத் தயிரியத்தினாலும் பொறுமையினாலும் அரணாக்கிக்கொள்.

ஒட்டகமானது கடும்வேலை, கானல், பசிதாகங்களை மணலின்வனாந்தரத்தூடாகத்தாங்கியுஞ் சலியாது. அப்படியே திடமுள்ளவன் ஆபத்துகளிலுந் துன்பங்களிலுந் தன் சன் மார்க்கத்தைத் தாங்குவன்

மேன்மையான இருதயம் அதிட்டத்தின் வன்மத்தை இகழும்; அவனாத்துமாவின் மகத்துவம் கீழ்ப்படுத்தப்பட்டிராது.

அவனுடைய இன்பம் அதிட்டத்தின் சிரிப்பைப்பற்றியிராததினால் அவன் அதின் சினப்பிற்குமஞ்சான்.

அவன் சமுத்திரத்திற் கன் மலைபோலத் திடனாய் நிற்கிறான். அலைகளின் மோதுதல் அவனை அலைவுபண்ணாது.

அவன் ஒரு மலைமேற் சிகரம்போலத் தன் தலையை உயர்த்துகிறான். அதிட்டத்தின் அம்புகள் அவன் காலில் விழுகின்றன.

மோசமுண்டாகுநிமிஷத்தில் அவன் இருதயத்தின் தயிரியம் அவனைத் தாங்குகின்றது. அவன் மனவுறுதி அவனை உயர்த்துகின்றது.

போருக்குப் போகிறவனைப் போல வாழ்வின் தீங்குகளை எதிர்த்துக் கையுடன் வெற்றிகொண்டுவருகிறான்.

அதிட்டவீனத்தினெருக்குதலின் கீழ் அவனமைதி அதின் பாரத்தை லேகுவாக்குகின்றது. தனது திடத்தினால் அவற்றை மேற்கொள்ளுகிறான்.

ஆனால் அச்சமுள்ள ஒருவனுடைய எளிமையானது அவனை வெட்கத்துக்குட்படுத்தும்.

வறிமையில் ஒடுங்குதலால் எளிமைக்குத் தாழுகிறான். பதனமயாய் நிந்தனைகளைச் சுமத்தலால் அவன் கேட்டை அழைக்கிறான்.

ஒரு நாணற் கம்பு காற்றின் மூச்சுக்கு அசைகிறதுபோலத் தீவினையினிழல் அவனை நடுங்கச் செய்கின்றது.

அவன் மோச வேளையிற் சிக்குப்பட்டுத் தடுமாற்றமடைகிறான். அதிட்டவீன நாளில் அவன் தாழுகிறான். ஏக்கம் அவன் ஆத்துமாவைத் அமிழ்த்துகின்றது.

இன்னும் வரும்.

ஐப்பசி மாதம் அ ந். } தேதி. }

இபபடிக்கு,
ஏகாம்பரம்.

---

## ஒப்பந்தஞ் செய்யத்தேவையானவர்களுக்கு.

பிறக்கிற அற்பசி மாதம், ௰க ந். தேதிக்கு மேலே பச்சிலைப்பள்ளியைச் சேர்ந்த உடுதுறையென்ற கிராமத்தில் மணற்காடு என்ற காடுவெட்டிச் சுத்தம்பண்ணிக் கொடுக்க ஒப்பந்தக்காரர் அநேகம் பேர்தேவையாயிருக்கிறபடியால், மேற்படி காடு மெத்த லேசும் சுலுபமுமான வேலையாகையால் இதை ஒப்பந்தமாகப் பேசி அவ்விடம் வந்து வேலைசெய்து சுத்தம்பண்ணிக் கொடுக்கப் பிரியமானவர்கள் எவரேன்கிலும் வந்து செய்து கொடுக்கலாம், முறையான சம்பளமும் கொடுக்கப்படும்.

Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.